**தலைப்பு 192 – சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று, சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 192 – சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 08 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 127 கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செயற்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதி செயற்பாடுகளும் திட்டமிடப்படல். | பாதீட்டு மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரிக்கப் படாமை | 2.3 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமை ஒன்று தயாரித்து கொள்ளல். | 1. முகாமைத்துவப் பலவீனங்கள்<br>2. மனித வள முகாமைத்துவ த்தில் குறைபாடுகள் | 2.2<br>2.5.1<br>2.5.2<br>2.5.3 |
| 127(2) | தனது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங் களில் அப்போதைக்கு இருக்கும் செலவு விடயங்கள் உட்பட புதிதாக அல்லது மிகையாக செலவிடுவதற் கான பிரேரணைகள் சிக்கனமாகவும் மற்றும் செயற்திறனாக அமைச்சில் கூர்மையான பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | 1. செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடல்<br>2. செயற்திட்டங்கள் நிறை வேற்றுவதில் தாமதங்கள்<br>3. வெளிநாட்டுதவி செயற்திட் டங்களின் செயறலாற்றுகை நிறைவேற்றப்படாமை | 2.1.1(அ)<br>2.1.1(ஆ)<br>2.2(ஈ) |

| | | | |
|---|---|---|---|
| 127(6) | கணக்கீட்டு உத்தியோக த்தர்களின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடு களை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்த ருக்கான முற்பணக் கணக்கில் காணப்பட்ட குறைபாடுகள் | 2.4 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 செய்பணிகள் நிறைவேற்றாமை

**(அ) செயல்நடவடிக்கை திட்டத்திலுள்ள செய்பணிகளை நிறைவேற்றாமை**

பின்வரும் விடயங்கள் 2017 திசெம்பர் 31 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை.

(i) இலங்கை பொலிஸ் மற்றும் விஷேட பணிபடையணி 320 பேரைக் கொண்ட படையணி ஒன்று மாலை தீவில் அரசின் அமைதிகாக்கும் கடைமைகளுக்காக ஈடுபடுத்தல்.

(ii) ரூபா 100 மில்லியன் ஏற்பாடுகளில் போதை பொருட்களுக்கு அடிமையாகியுள்ள நிலைமையில் உள்ள ஆட்களை மீட்டெடுக்கும் நிகழ்ச்சி திட்டம்.

(iii) கொழும்பு மற்றும் அண்மித்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் சட்டமும் ஒழுங்கும் பேணல் மற்றும் ஏனைய சந்தர்பங்களில் தாமதமின்றி சேவையில் ஈடுபடுத்தும் குறிக்கோளுடன் தீவிர தேவை என விஷேட பணிபடையணியின் திருமணமாகிய உத்தியோகத்தர்களுக்காக ரூபா 388.14 மில்லியனிற்கான செலவில் உத்தியோகபூர்வ வீடமைப்பு தொகுதியொன்று நிர்மாணிப்பதற்காக 2016 ஆண்டின் போது புதிய செயற்திட்டமொன்றாக திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் மீளாய்வாண்டிற்காக ரூபா 67 மில்லியன் ஒதுக்கியிருந்த போதிலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2014 ஆண்டு முதல் உத்தேச பொலிஸ் பல்கலைகழகம் மற்றும் குற்றவியல் நியாய பல்கலைகழகம் என பேர் இடப்பட்டு, நிர்மாணவேலை அலுவல்களுக்காக பிரதேசத்தில் அமைத்து இலங்கை பொலிஸ் இற்கு சொந்தமான 16 ஏக்கர் காணி ஒன்றும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் பல்கலை கழகம் நிறுவுவதற்கான சட்ட வரைவு தயாரித்து அங்கீகாரம் பெறல் 2017 ஆண்டு இறுதிவரை நடைபெற்று இருக்கவில்லை.

(v) மோட்டார் வாகன தண்டப் பண அறவீடு செய்தலை விரைவுபடுத்தலும் அரச வருமானத்திற்கு கிடைக்க கூடிய தண்டப் பணத் தொகையை அதிகரித்தலும், பொது மக்களுக்கு தண்டப் பணம் செலுத்துவதை இலகுவாக்குதல் என்பவற்றை குறிக்கோளாக கொண்டு மோட்டார் வாகன வீதி சட்டங்களை மீறும் சந்தர்பங்களில் நீதிமன்றத்திற்கு சமர்பிக்கப்படாத குற்றங்களுக்காக சுயமாக செயற்படும் தண்டப்பணம் செலுத்தும் செயல்முறையொன்றின் தேவையினை 2014 ஆண்டு முதல் இனங்கண்டிருந்தது. செயற்திட்டம் அரச மற்றும் தனியார் உரிமையின் கீழ் மேற்கொள்வதற்காக செயற்பட்டிருந்த

போதிலும் சுயமாக செயற்படும் தண்டப் பணம் செலுத்தும் முறை 2018 ஜுலை 31 திகதி வரை நிறுவப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் கடமைகளுக்காக தேவையான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக, 2017 ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் ரூபா 868.33 மில்லியனாகும். தேவையான உபகரணங்கள் மற்றும் 08 அடிப்படை உபகரண தொகுதிகளின் கீழ் கொள்வனவு செய்வதற்கான பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 04 ஆவது தொகுதியின் கீழ் இரண்டு மின்பிறப்பாக்கிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 8.17 மில்லியன் செலுத்துதல் மாத்திரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) தென் மாகாண அபிவிருத்தி சபை நிறுவுவதற்கான சட்டம் 2018 ஜுலை 31 திகதி அளவிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது தென் மாகாண அபிவிருத்தி சபைக்காக ரூபா 120 மில்லியன் ஒதுக்கியிருந்த போதிலும் அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் நிறுவப்பட்டிருந்த தெற்கு அபிவிருத்தி துணை சபை செலவுகளுக்காக ரூபா மில்லியன் 52.08 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது தென் மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காக 724 செயற்திட்டங்களுக்கு ஒதுக்கியிருந்த ரூபா 1,000 மில்லியன் ஏற்பாடுகளில் ரூபா 774.6 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு செயற்படுத்தப்படாத செயற்திட்டங்களில் மாத்தறை மாவட்டத்தில் 09 பாதைகள் காபட் போட்டு அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 326.00 மில்லியன் தொகை ஏற்பாடுகளும் அடங்கியிருந்தன.

### 2.1.2 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்திருந்தமையினால் நெருங்க வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் 3 - ஆரோக்கியமான மற்றும் நல்லொழுக்க மற்றும் 16 – ஒழுங்கு நியாயம் மற்றும் வலுவான நிறுவனத்தின் கீழ் 06 இலக்குகள் இனங்கண்டிருந்ததுடன் பொறுப்பு சொல்ல வேண்டிய நிறுவனம் என இலங்கை பொலிஸ் பெயரிடப்பட்டிருந்தது. 2015 ஆண்டினை அடிப்படை ஆண்டிடாகக் கொண்டு குறிகாட்டிகள் கட்டியெழுப்புதல் நடைபெற்ற போதிலும், நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி நெருங்கும் போது உரிய கருமங்களை ஒழுங்குபடுத்துவதற்கு தேவையான திருப்பு முனைகளை இனங்கண்டிருக்கவில்லை.

### 2.2 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறைசார் விதமாக அங்கீகரிக்கப்பட்டிருக்காத அலகு கூறுவிலைகளின் அடிப்படையில் மற்றும் நிறைவேற்றுவதற்கு உத்தேசித்துள்ள வேலை விடயங்களுடன் தொடர்பில்லாத அலகு கூறு விலைகளின் மீது மதிப்பீடு தயாரித்திருந்த காரணத்தினால் 2016 ஆண்டின் போது அமைச்சினால் காலி, மாத்தறை மற்றும் ஹம்பந்தோட்டை மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கியிருந்த ஏற்பாடுகளின் மீது செயற்படுத்தப்பட்ட 88 வீதி

அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 23,793,711 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) தெற்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின கீழ் வெலிகம பிரதேச செயலகத்தின் இரண்டு பாதைகளுக்கு கொங்கிரீட் கற்கள் பதித்து நவீன மயப்படுத்துவதற்காக ஒப்பந்த வேலைப் பெறுமதியின் 70 சதவீதம் அதாவது ரூபா 1,378,839 தொகை ஆய்வுகூட அறிக்கை இன்றி 2016 திசெம்பர் மாதம் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதற்காக, பின்னர் பெற்றிருந்த ஆய்வுகூட அறிக்கையின் பிரகாரம் இந்த இரண்டு பாதைகளுக்கு பதிக்கப்பட்டடிருந்த கொங்கிரீட் துண்டுகற்கள் உரிய அமுக்கு சக்தி (30 $N/mm^2$ ) இன்றியவை என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) விஷேட பணி படையணியின் விவாகமாகிய உத்தியோகத்தர்களுக்கான உத்தியோகபூர்வ வீட்டுத்தொகுதி ஒன்று நிர்மாணிக்கும் செயற்திட்டமொன்றிற்காக ரூபா 45,906,745 (பெ.கூ.வரி உடன்) தொகைக்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டு 2007 ஆண்டின் போது ரூபா 9,181,393 தொகை தயாரிப்பதற்கான முற்பணம் என செலுத்தப்பட்டிருந்தது. இந்த வேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு வேலை மீண்டும் வேலை ஆரம்பிக்கப்படாமையினால் செலுத்தப்பட்டிருந்த முற்பணத்தொகையில் இருந்த சான்றுபடுத்திய வேலையின் பெறுமதியினை கழித்த பின்னர் மீதியாகிய ரூபா 4,917,990 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) இலங்கை பொலிஸில் கடமையாற்றும் போது ஊனமுற்ற நிலைமைக்கு ஆளாகியவர்களின் நலனோம்பு அலுவல்களை நிறைவேற்றுவதற்காக 2014 நவம்பர் 26 திகதி சீன கூட்டரசில் இருந்து கிடைத்து திறைசேகரிக்கு அனுப்பியிருந்த ரூபா 4,150,000 இற்கான தொகை இதுவரை அந்த குறிக்கோளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு**

---

2013 ஆகஸ்ட் 16 திகதி 1823/70 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் சட்டமும் ஒழுங்கும் தொடர்பான அமைச்சு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு மீதான தகவல்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2014 | மீண்டுவரும் | 5,863.2 | 5,650.1 | 213.1 | 3.6 |
| | மூலதன | 463.0 | 359.4 | 103.6 | 22.4 |
| | **மொத்தம்** | **6,326.2** | **6,009.5** | **316.7** | **5.0** |
| 2015 | மீண்டுவரும் | 6,640.8 | 6,566.0 | 74.8 | 1.1 |
| | மூலதன | 979.9 | 704.1 | 275.8 | 28.1 |
| | **மொத்தம்** | **7,620.7** | **7,270.1** | **350.6** | **4.6** |
| 2016 | மீண்டுவரும் | 7,466.7 | 7,042.6 | 424.1 | 5.7 |
| | மூலதன | 1,971.4 | 1,005.9 | 965.5 | 49.0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மொத்தம்** | **9,438.1** | **8,048.5** | **1389.6** | **14.7** |
| 2017 | மீண்டுவரும் | 7,493.4 | 7,403.6 | 89.8 | 1.2 |
| | மூலதன | 3,272.7 | 887.0 | 2,385.7 | 72.9 |
| | **மொத்தம்** | **10,766.1** | **8,290.6** | **2,475.5** | **23.0** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

**ஒதுக்கீட்டு கணக்கீடு**

**(i) ஒதுக்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தாமை**

24 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 125.4 மில்லியன் இற்கான மொத்த தேறிய ஏற்பாடுகள் ஏதும் பயன்படுத்தப்படாமல் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை ஏற்பாடுகள் மேற்கொண்டிருத்தல்**

23 செலவு விடயங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 3,030 இற்கான மிகை ஏற்பாடுகள் ஒதுக்கியிருந்தமையால் அந்த செலவு விடயங்களுக்கான ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 707 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தியிருந்தமையால் மீதித் தொகை ஒதுக்கியிருந்த தேறிய ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான வீச்சு அளவினைக் கொண்டிருந்தது.

**(iii) குறைநிறைப்பு மதிப்பீடு ஒதுக்கத்தின் மூலம் ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ளல்**

8 செலவு விடயங்களுக்கான ஒதுக்கியிருந்த குறைநிரப்பு ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 2,940 மில்லியன் தொகையில் ரூபா 2,135 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு சதவீதம் பெற்றிருந்த குறைநிரப்பு ஏற்பாடுகளில் 21 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சுக்குரிய 19201 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறை ந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 100 | 82 | 75 | 100 | 230 | 111 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) நிலுவை கடன் மீதியை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்கு சமர்பித்திருந்த இணக்ககூற்றுகளின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதி தவிர ரூபா 2,015,762 தொகையாக காணப்பட்டதுடன் 2018 அக்தோபர் மாதம் 15 திகதி வரை அவற்றில் ரூபா 1,332,808 தொகை நிலுவையாக காணப்பட்டது. அந்த நிலுவை கடன் மீதி 01 வருடம் முதல் 14 வருடங்கள் வரை கால வீச்சு முதல் காணப்பட்ட போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்காக அமைச்சுக்கு இயலாதிருந்தது.

**(ஆ) ஆதனக் கடனை அறவீடு செய்யாமை**

மீளாய்வாண்டு இறுதி அளவில் இரண்டு உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கூட்டுத் தொகை ரூபா 548,327 தொகை கடன் 10 வருடங்களை கடந்திருந்தது. 2004 அக்தோபர் 11 திகதிய 118 ஆம் இலக்க பாதீடு சுற்றறிக்கையின் பந்தி 5.2 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டமா அதிபரின் அறிவுரையின் படி அந்த ஆதனங்கள் ஏலவிற்பனை செய்து அரசுக்கு அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

### 2.5.1 இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்

மேற்கூறிய அமைச்சின் பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகை பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 5,258.22 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(அ) சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் பதவியணி**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 18 | 17 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 03 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 65 | 47 | 18 |
| (iv) | ஆரம்ப நிலை | 34 | 29 | 05 |
| | மொத்தம் | 123 | 96 | 27 |

## (ஆ) பொலிஸ் விஷேட பணி படையணி சீருடை பதவியணி

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு சீருடை பதவியணி தொடர்பான நிலைமை கீழ்வருமாறு ஆகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 68 | 46 | 22 |
| (ii) | மூன்றாம் நிலை | 346 | 308 | 38 |
| (iii) | இரண்டாம் நிலை | 10,329 | 7,471 | 2,858 |
| | மொத்தம் | **10,743** | **7,825** | **2,918** |

(i) பொலிஸ் விஷேட பணி படையணியின் சீருடை பதவியணி வெற்றிடங்கள் 2,918 காணப்பட்டன. அவற்றில் பொலிஸ் கோஸ்தபல் பதவியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை 2,331 தொகையாக இருந்ததுடன், அவை அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 33 சதவீதம் காணப்பட்டமையால் பொலிஸ் விஷேட பணி படையணி அலுவலகளை தடைகள் இன்றி நடாத்துவதற்கு தேவையான உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) பொலிஸ் விஷேட பணி படையணியின் சீருடை பதவியணியினர் சிரேஷ்ட மட்டத்தை சேர்ந்த 22 வெற்றிடங்கள் காணப்பட்டன. 22 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதவிகளில் 05 மற்றும் 45 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் பதவிகளில் 17 பதவிகள்கள் வெற்றிடமாகக் காணப்பட்டது.

(iii) பொலிஸ் விஷேட பணி படையணிக்கான அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டமையால் உள்ளக கணக்காய்வு விடயங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## (இ) பொலிஸ் விஷேட பணி படையணி – சிவில் பதவியணி

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிவில் பதவியணி தொடர்பாக நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 4 | 3 | 1 |
| (ii) | மூன்றாம் நிலை | - | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 65 | 34 | 31 |
| (iv) | ஆரம்ப நிலை | 631 | 566 | 65 |
| | மொத்தம் | **700** | **603** | **97** |

**2.5.2 முறையற்ற விதமாக வேறு தரப்பினருக்கு விடுவித்திருந்த மனித வளங்கள்**

அமைச்சினால் உத்தியோகத்தர் ஒருவர் ஜனாதிபதி செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அவரின் சம்பளமாக ரூபா 438,888 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதனை மீளளிப்பு செய்திருக்கவில்லை.

**2.5.3 முறையற்ற விதமாக வேறு தரப்பினரிடம் பெற்றிருந்த மனிதவளம்**

வேறு நிறுவனங்களின் 28 உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 06 பெண் உத்தியோகத்தர்கள் அமைச்சின் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவர்களின் சம்பளத்தை குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து மீளளிப்பு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.